O.S.No. : 82/2015

Dated : 02.02.2026

**வா.சா.1 : தேகுரம்மா ; க/பெ. ராமன்**

**<u>7-ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1. எனக்கு வழக்கு விவரங்கள் தெளிவாக தெரியுமா என்றால் தெரியும். எனது ராமன் உதகமண்டலத்தில் நிலஅளவையராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார் என்றால் சரிதான். எனது மகன் தாவா சொத்தினை 1 மற்றும் 2 பிரதிவாதிகளிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதன்பிறகு எனது மகன் எனக்கு தானப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் ஆதியில் 1-ஆம் பிரதிவாதி K.P. ராஜுவின் தகப்பனார் பாப்பண்ண கவுடருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

2. மேற்படி பாப்பண்ண கவுடர் 1948-ஆம் ஆண்டு சீனிவாசராவ் என்பவரிடமிருந்து மேற்படி சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதபற்றி எனக்கு தெரியாது. மேற்படி சீனிவாசராவ் என்பவருக்கு 46 சென்ட் பாத்தியப்பட்டிருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கில் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராகத்தான் இடைக்கால தடை உத்தரவு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்து பத்து மாதங்களுக்கு பிறகுதான் 7-ஆம் பிரதிவாதியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான், வழக்கு தாக்கல் செய்த பிறகு 2018-ல் அவரை தரப்பினராக சேர்த்தோம்.

3. நான் 7-ஆம் பிரதிவாதிக்கு எதிராக இடைக்கால தடை உத்தரவு கோரி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 7-ஆம் பிரதிவாதின் சொத்திலிருந்து எனது சொத்தானது சுமார் 15 அடி உயரத்தில் அமைந்துள்ளது என்றால் சரியல்ல, இரண்டும் சமஉயரத்தில்தான் அமைந்துள்ளது. நான் தாவா சொத்தினை வாங்குவதற்கு முன்பே வழக்கில் பிரச்சினைக்குரியதாக சொல்லப்படும் சாலை அங்கு இருந்ததா என்றால்

இருந்தது. நகராட்சி சாலையிலிருந்து 7-ஆம் பிரதிவாதியின் வீட்டிற்கு மட்டும்தான் வழி இருந்தது என்றும், எனது சொத்திற்கு எந்த வழியும் இருக்கவில்லை என்றும் சொன்னால் வழியில்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் தாவா சொத்தினை கிரையம் பெறுவதற்கு முன்பே அதற்கு வழக்கில் கூறியுள்ள வழி இருந்ததாக கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

4. நான் தாவா சொத்தினை கிரையம் பெறுவதற்கு முன்பே வழக்கில் கோரியுள்ள சாலை எனது சொத்திற்கு இருந்தது என்பதை காண்பிக்க ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது மகன் தாவா சொத்தினை கிரையம் பெறுவதற்கு முன்பாக மேற்படி K.P. ராஜுவிற்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்களை பார்வையிட்டோமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. 2011-ஆம் ஆண்டில் தாவா சொத்தினை எனது மகனுக்கு விற்பனை செய்த K.P. ராஜு என்பவருக்கு 7-ஆம் பிரதிவாதியின் பூமி வழியாக நடைபாதை உரிமை எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் எனது கணவர் இல்லாத ஒரு பாதையை இருப்பதாக காண்பித்து ஆவணம் தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது கணவர் நிலஅளவையர் என்பதால் இல்லாத பாதையை இருப்பதாக காண்பித்து ஒரு வரைபடத்தை உருவாக்கி போலியான பத்திரத்தை தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. ஆதியில் சீனிவாசராவ் என்பவர் K.P. ராஜு என்பவரின் தகப்பனார் பாப்பண்ண கவுடருக்கு சொத்தினை விற்பனை செய்யும்போது 5 அடி அகலமுள்ள ஒற்றையடிப் பாதையைத்தான் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சீனிவாசராவ் என்பவர் பாப்பண்ண கவுடருக்கு 7-ஆம் பிரதிவாதியின் பூமியிலிருந்து எந்தவிதமான வழியும் கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, 500 வருடங்களாக அந்த நடைபாதை உள்ளது, அதை தற்போது நாங்கள் பயன்படுத்தி வருகிறோம்.

6. 7-ஆம் பிரதிவாதிக்கு தாவா சொத்தினை ஒட்டி அவரது தகப்பனார் மூலமாக 83 சென்ட் பாத்தியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, 7-ஆம் பிரதிவாதி

அங்கு 93 சென்ட் பூமியை விற்பனை செய்துள்ளார், 7-ஆம் பிரதிவாதிக்கு தற்போது அந்த இடத்தில் எந்தவிதமான பூமியும் பாத்தியமில்லை. அந்த 83 சென்ட் பூமியில்தான் 7-ஆம் பிரதிவாதி தனது பூமிக்கு செல்வதற்காக பாதை அமைத்துள்ளார் என்றால் சரியல்ல. 7-ஆம் பிரதிவாதியின் பூமிக்கு நடுவில் ஒரு கால்வாய் செல்கிறது என்றால் சரியல்ல, அது அரசுக்கு சொந்தமான பூமியாகும், அந்த அரசுக்கு சொந்தமான பூமியில்தான் நீரோடை உள்ளது. தனது பூமியில் நீரோடை உள்ளதால் 7-ஆம் பிரதிவாதி அதில் பாலம் அமைத்து பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல, பாலம் அங்குள்ளது.

7. 7-ஆம் பிரதிவாதி விவசாய பூமியாக இருந்த தனது இடத்தை மனையிடங்களாக பிரித்தார் என்றால் சரிதான். அவ்வாறு 7-ஆம் பிரதிவாதி தனது பூமியை மனையிடங்களாக பிரிக்கும்போது தனது 83 சென்ட் பூமியில் இருந்து 7 ½ சென்ட் பூமி மற்றும் 4 சென்ட் பூமி ஆகியவற்றை சாலைக்காக ஒதுக்கினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 7-ஆம் பிரதிவாதி விற்பனை மனையிடங்களில் தற்போது 5 முதல் 6 வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்றால் அதற்கும் அதிகமாக வீடுகள் கட்டப்பட்டுவிட்டன. அவ்வாறு மனையிடங்களாக பிரித்து விற்பனை செய்த பூமியில் வீடுகட்டியுள்ள நபர்களுக்கு மட்டும்தான் மனையிடங்களை பிரிக்கும்போது ஏற்படுத்தப்பட்ட பாதையை பயன்படுத்த உரிமையுள்ளது என்றும், எனது பூமிக்கும் அந்த பாதைகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் சொன்னால் சரில்ல, சம்பந்தமுள்ளது. எனது பூமி உள்ள இடத்தில் சர்வே எண். 1535 என்றால் சரியல்ல, சர்வே எண். C25/45 ஆகும்.

8. நான் கூறும் C25/45 என்பது பழைய சர்வே எண் என்றும், நாங்கள் வாங்கிய சொத்தின் பழைய சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ. 1 ஆவணத்தின்படி எனது பூமியுள்ள சர்வே எண். 1544/1 என்றால் ஞாபகமில்லை. 7-ஆம் பிரதிவாதியின் பூமி உள்ள சர்வே எண். 1535 என்றால் ஞாபகமில்லை. 7-ஆம் பிரதிவாதியின் பூமியின் பழைய சர்வே எண். 1535 என்பது பின்னிட்டு 1535/1A2, என்று உட்பிரிவு செய்யப்பட்டு பின்பு

அதற்கு புதிய சர்வே எண். C25/34 வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை.

9. நான் நகராட்சி சாலையிலிருந்து எனது பூமிக்கு உள்ளதாக சொல்லும் பாதையின் நீளம் என்ன என்றால் 12 அடியாகும். (**சாட்சி மீண்டும் மாற்றி 80 மீட்டர் நீளம் மற்றும் 12 அகலம் கொண்ட சாலை என்று சாட்சியமளிக்கிறார்.**) தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணமானது 7-ஆம் பிரதிவாதி மனையிடங்களாக பிரித்ததற்கான வரைபடம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியருக்கு சந்திரன் பூமி எவ்வளவு அளவு, நகராட்சி பூமி எவ்வளவு அளவு, கால்வாயின் அளவு எவ்வளவு என்று கேட்டு கடிதம் அனுப்பினேனா என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை.

10. எனது பூமியைச் சுற்றி யார்யார் பூமி உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் K.P. ராஜு பூமி உள்ளது, மற்ற யாருக்கும் பூமி இல்லை. எனது வீட்டிற்கும் நகராட்சி சாலைக்கும் இடையே வீடுகட்டியுள்ள நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது பூமிக்கும் நகராட்சி சாலைக்கும் இடையே உள்ளதாக நான் கூறிய 80 மீட்டர் சாலையானது 7-ஆம் பிரதிவாதியின் பூமியாகும் என்றால் சரியல்ல. நகராட்சி சாலையிலிருந்து 7-ஆம் பிரதிவாதியின் பூமியின் பாதிவரை சுமார் 15 அடி அகலத்திலும், அதன் குறுக்கே சுமார் 12 அடி அகலத்திலும் சாலை போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நகராட்சி சாலையிலிருந்து ஒரே சாலைதான் 12 அடி அகலத்தில் போடப்பட்டுள்ளது. நான் கூறிய 80 மீட்டர் சாலையானது 7-ஆம் பிரதிவாதி சந்திரனின் பூமியில் போடப்பட்ட சாலை என்றும், அதில் மேற்படி 7-ஆம் பிரதிவாதியிடம் இருந்து பூமியை கிரையம் பெற்ற நபர்களுக்கு மட்டும்தான் 7-ஆம் பிரதிவாதி உரிமை கொடுத்துள்ளார் என்றும், எனக்கோ மற்ற நபர்களுக்கோ அதில் எந்தவித உரிமையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

11. எனது பூமிக்கு மீனன் மற்றும் ராஜன் ஆகியோரது பூமிக்கு இடையே உள்ள 5 அடி பாதை மட்டும்தான் உள்ளது என்றால் சரியல்ல, அந்த இடத்தில் பாதை எதுவும் இல்லை. அங்கு ஒரு பாதை உள்ளது என்றும், அதில்தான் எனக்கு உரிமை உள்ளது என்றும், நான் வழக்கிற்காக பாதையில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்கு படிப்பறிவு இல்லை என்பதால் எனது கணவர் 7-ஆம் பிரதிவாதியின் பூமியில் போடப்பட்டுள்ள பாதையை காண்பித்து தவறாக பத்திரம் செய்துள்ளார் என்றால் சரியல்ல, அவர்கள் படிப்பறிவு உள்ளவர்கள், அரசுப்பணியில் உள்ளார்கள். மேற்படி பொய்யான பத்திரத்தை பயன்படுத்திதான் நகராட்சியில் அனுமதி பெற்று இரண்டுமாடி கட்டிடம் கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல.

12. நான் கூறுவதுபோல நகராட்சி சாலையிலிருந்து எனது பூமிக்கு 80 மீட்டர் நீளம் மற்றும் 12 அடி அகலம் கொண்ட சாலை உள்ளதாக கூறுவது 7-ஆம் பிரதிவாதிக்குச் சொந்தமான பூமியாகும் என்றும், அதில் எனக்கு உரிமையில்லை என்றும் சொன்னால் சரியல்ல, உரிமை உள்ளது. அதனால்தான் நான் இந்த வழக்கில் 7-ஆம் பிரதிவாதிக்கு எதிராக எந்தவித விளம்புகை பரிகாரமும், உறுத்துக்கட்டளை பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இல்லாத ஒரு பாதையை உள்ளதாக காண்பித்து பத்திரம் ஏற்படுத்தியுள்ளதால் அந்த பத்திரம் செல்லத்தக்ககல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

L. Prakash

Digitally signed by L. Prakash
Date: 2026.02.02 19:56:48 +0530